**செ. கு. எண்**: 33 **நாள்**: 19.01.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.1.2012

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், திருவாமத்தூர் கிராம எல்லையில் 17.1.2012 அன்று திருச்சிராப்பள்ளியிலிருந்து சென்னை சென்று கொண்டிருந்த காரின் மீது ஏழுசெம்பொன் கிராமத்திலிருந்து விழுப்புரம் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில், காரில் பயணம் செய்த விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையைச் சேர்ந்த திரு. ராஜகோபால் என்பவரின் மனைவி திருமதி நாகசுப்புலட்சுமி, திரு. அய்யப்பன் என்பவரின் மகன் கார் ஓட்டுநர் ஆழ்வார்சாமி மற்றும் திரு. ராகுல் கார்த்திக் என்பவரின் ஆறு மாதக் குழந்தை பிரஜன் அபிநந்தன் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திருமதி நாகசுப்புலட்சுமி, திரு. ஆழ்வார்சாமி மற்றும் குழந்தை பிரஜன் அபிநந்தன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அந்த காரில் பயணம் செய்த சென்னை, மேடவாக்கத்தைச் சேர்ந்த திரு. ராகுல் கார்த்திக் மற்றும் அவரது மனைவி திருமதி விநாயகலட்சுமி ஆகிய இருவரும் பலத்த காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருமதி நாகசுப்புலட்சுமி, திரு. ஆழ்வார்சாமி குழந்தை பிரஜன் அபிநந்தன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திரு. ராகுல் கார்த்திக் மற்றும் அவரது மனைவி திருமதி விநாயகலட்சுமி ஆகியோருக்கு தலா 25,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**